# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550

UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் – 2018

9



visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

## INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

**UCG RECOGNIZED JOURNAL**

**UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118**

மலர் : 6 அக்டோபர்-2018 இதழ் : 10



**பதிப்பாசிரியர்**

**நல். நடராசன்**

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
82489 54308, 63817 01339

**பல்லவி பதிப்பகம்**

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

**pallavipublications@gmail.com**
**ayidhaezhuthu@gmail.com**



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.P.Sathyamoorthy**
*Madurai Kamarajar University, Madurai.*
mkutamil2010@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

**ஆசிரியர் குழு**

**முனைவர் சி.தியாகராசன்**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

**முனைவர் க.இரமேஷ்**
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

**முனைவர் போ.சத்தியமூர்த்தி**
*மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.*
mkutamil2010@gamil.com

**முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்**
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

**முனைவர் கி.சங்கரநாராயணன்**
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

**முனைவர் உ.அலிபாவா**
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

**முனைவர் சு.அரங்கநாதன்**
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

# பொருளடக்கம்


1. நல்லந்துவனார் பாடல்களில் நெய்தல் வாழ்வியல்

***வே.பவானி, * முனைவர் ப.டேவிட் பிரபாகர்** - 1

2. புறநானூறு உணர்த்தும் வாழ்வியல் மென் திறன்கள்

***முனைவர் ப.டேவிட் பிரபாகர்** - 4

3. எட்டுத்தொகையில் நடுகல்

***முனைவர் சு.உமா** - 7

4. பெரியபுராணம் காட்டும் விருந்தோம்பல்

***முனைவர் ஆர்.இளவரசி** - 11

5. தொல்காப்பியத்தில் போர் சார்ந்த மானுட விழுமியங்கள்

***முனைவர் தா.இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி** - 14

6. குறிஞ்சி, முல்லையின் அகப்புற வாழ்க்கை

***முனைவர் தா.ஜெயந்தி** - 17

7. தொடக்ககாலப் படிநிலை வரிசையில் அந்தணர்களும் பார்ப்பனர்களும்

***க.சிந்தியா** - 20

8. "ஆசாரக் கோவையில் வாழ்வியல் சிந்தனைகள்"

***முனைவர் இரா.கலா ஞானசெல்வம்** - 23

9. அகத்திணை புலப்படுத்தும் வாழ்க்கை நெறி

***கா.கயல்விழி** - 26

10. தமிழர் வாழ்வில் வீரமும் ஈரமும்

***எம்.கிருபாவதி** - 31

11. "திருமந்திரமும் திருவருட்பாவும் காட்டும் வாழ்வியல் சிந்தனைகள்"

***பா.லதா** - 33

12. மாறிய வழித்தடங்கள் : போக்கும் பின்னணியும்

***கவியரசன்.மு, *நெறியாளர்-பேராசிரியர்.க.ராமபாண்டி** - 36

13. குற்றப்பரம்பரை நாவல் உணர்த்தும் வாழ்வியல் சிந்தனைகள்

***மு.செல்வக்குமார்** - 40

# எட்டுத்தொகையில் நடுகல்

*முனைவர் சு.உமா, உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, மேலப்பாளையம், திருநெல்வேலி – 627005.

**முன்னுரை**

காதலும், வீரமும் கண்ணெனப் போற்றப்பட்ட காலம் சங்ககாலம். தன் நாட்டையும் செல்வத்தையும் தொடர்ந்து பெருகச் செய்வதையே அரசனும் விரும்பினான், அவர்தம் வீரர்களும் விரும்பினர், அவ்வாறு தனக்குத் துணைநின்ற வீரர்க்கு வெகுமதியும், வெற்றிக்குக் காரணமாய் மாண்ட வீரர்க்கு நடுகல் வைத்து வழிபட்டதையும் சங்கப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன. அதன்படி எட்டுத்தொகை நூல்களில் இடம்பெறுகின்ற நடுகல் பற்றிய செய்திகளை இங்கு காண்போம்.

**நடுகற்கள்**

தமிழ் இலக்கண இலக்கியங்கள் இறந்தவர்கள் நினைவாகக் கல்லெழுப்பும் மரபினைக் குறிப்பிடுகின்றன. தமிழ்நாட்டில் இம்மரபு இருந்ததற்குரிய சான்றுகளை தமிழ் இலக்கியங்கள் சுட்டுகின்றன. இறந்தவர்களின் நினைவாக நட்ட கற்களைத் தமிழ் இலக்கியங்கள் நடுகல் எனக் குறிக்கின்றன.

**"காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்**
**சீர்த்தகு சிறப்புன் பெரும்படை வாழ்த்தலென்று**
**இருமூன்று வகையிற் கல்லொடு புணர"** (தொல்காப்பியம். நூற்.5)

என்று தொல்காப்பியர் நடுகல்லை ஆறு பிரிவாகக் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் நடுதல் என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார். எனவே இது கல்லை நடுதல் என்றே பொருள்படும். புறப்பொருள் வெண்பாமாலை நடுகல் என்றே குறிப்பிடுகின்றது. வெற்றியுடைய போரிலே பட்ட மறவனுக்குக் கானகத்தில் நீண்ட இடத்தே ஆராய்ந்து நல்ல கல்லைக் காண்பதை **"கற்காண்டல்"** என்றும், தாம் கண்ட கல்லைக் கைக் கொள்வதை **"கற்கோள் நிலை"** என்றும், அம்மறவனுக்கு நிறுத்தற்பொருட்டு கைக்கொண்ட கல்லினை நீரிலே இடுவதை **"கல்நீர்ப்படுத்தல்"** என்றும், கல்லின் மேல் போரிலேப் பட்ட அம்மறவனுடைய பெயரும் பெருமையும் எழுதி அக்கல்லை அழகு உண்டாக நடுதலை **"கல் நடுதல்"** என்றும், அம்மறவனுடைய நடுகல்லை வாழ்த்துதலை **"கல் முறைப்பழிச்சல்"** என்றும், வேந்தர் போரிடத்தே பட்ட மறவனுடைய கல் என்று புகழ்ந்து வாழ்த்தினராய்த் திரண்டு கோயிலெடுத்து, அக் கோயிலில் அக்கல்லைக் கொண்டு புகுதலை **"இற்கொண்டு புகுதல்"** என்றும் நடுகல் குறித்த செய்திகளைப் புறப்பொருள் வெண்பாமாலை குறிப்பிடுகின்றது. தமிழில் நடுகல் என்பது, வீரகலு எனக் கன்னட மொழியிலும், வீரசிலாலு என்று தெலுங்கு மொழியிலும் கூறப்பட்டுள்ளது. மேற்கு இந்தியாவில் நடுகல்லை பலியா, கம்பியா, சர என்ற பெயர்களில் அழைக்கின்றனர். மத்திய இந்தியாவில் மரியர்களால் வழிபடப்படும் நடுகல் "உரஸ்கல்" என்றும் வட இந்தியக் கொல்லா மற்றும் போயா இனத்தவர் "வீர்கா" என்றும் நடுகல்லை அழைக்கின்றனர்.

"இது வெற்றியான் மேம்பட்டுத் துறக்கம் புக்கப் பெருவீரர் பெயரையும், அவர்கள் ஆங்காங்குப் புரிந்த போர்ச் செய்திகளையும் ஒரு நெடுங்கல்லில் எழுதி, அதனை நாட்டி அதில் அவர்களின் உருச் செய்து மாலை பீலி முதலிய புனைந்து வழிபடுதல் தமிழ்நாட்டுப் பழைய வழக்கமானது" என நடுகல் விளக்கம் குறித்து அபிதான சிந்தாமணி கூறுகிறது.

**"கீர்த்த துகளிற்றாய் தெய்வச் சிறப்பெய்த**
**நீர்ப்படுத் தற்கு நிலை குறித்துப் - போர்க் களத்து**
**மன்னட்ட வென்றிமற வோன் பெயர் பொறித்துக்**

ISSN : 2278-7550

பல்லவி பதிப்பகம்

2278-7550